Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No.498/ 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.6**

| | | | |
|---|---|---|---|
| Name: | ராமமூர்த்தி | Calling: | உதவி ஆய்வாளர் |
| Father's Name: | ராமநாயுடு | Religion: | |
| Village: | ஜோலார்பேட்டை | Age: | 59 |
| Taluk: | ஜோலார்பேட்டை | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 28.04.2026

(எதிரி ஆஜர்.)

அ.சா.6 முதன்மை விசாரணை

நான் தற்போது மாவட்ட குற்ற ஆவண காப்பகத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். (இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.சுந்தரேசன் என்பவருக்காகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.வெங்கட்ராகவன் என்பவருக்காகவும் சேர்த்து சாட்சியம் அளிக்கவும், அவர் தயாரித்த ஆவணங்களை இந்த சாட்சியத்தின் மூலம் குறியீடு செய்யவும் கற்றறிந்த எதிரியின் தரப்பு வழக்கறிஞர் எவ்வித ஆட்சேபனை இல்லை என தெரிவித்தார்.)

கடந்த 06.10.2024ம் தேதி அம்பலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பொறுப்பு அலுவலில் இருந்த சிறப்பு உதவி ஆய்ளவார் அவர்கள் குற்ற எண்.326/2023, இதச பிரிவுகள் 279, 337 என்ற வழக்கின் முதற்கட்ட விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக எனது

பார்வைக்கு வைத்ததை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று பார்வையிட்டதில் ஏற்கனவே அவர் தயாரித்த ஆவணங்களை அவர் தயாரித்தது போலவே இருந்ததால் நான் தனியாக ஆவணங்கள் தயார் செய்யவில்லை. அவர் விசாரித்த சாட்சிகளை நான் விசாரித்தபோது அவரிடம் சொன்னதுபோலவே கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை. விபத்து ஏற்படுத்திய வாகனமான டி என் 23 என் 1843 என்ற அரசு பேருந்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. வெங்கட் ராகவன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கைகள் பெற்றேன். **அந்த ஆய்வறிககை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

விபத்தில் காயம்பட்ட வெங்கடேஷ் என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் சுதர்ஷன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொடுங்காயம் என சான்று பெற்றேன். **வெங்கடேஷின் காயச்சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மருத்துவர் கொடுங்காயம் என சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவுகள் 279, 337 என்பதிலிருந்து இதச பிரிவுகள் 279, 338 ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து அறிக்கை தயார் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீதான குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரி சந்திரமோகன் மீது இதச பிரிவுகள் 279, 338 ஆக இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் குவிமுச பிரிவு 161(3) ன் படி வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இவ்வழக்கில் நான் யாரையும் விசாரித்து தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடமானது மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு இரு புறத்திலும் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடமானது எப்போதும் குண்டும் குழியுமாக சீராக இல்லாமல் தான் இருக்கும் என்றால் சரியல்ல. சம்பவ தினத்தில் அப்போது தான் பேருந்து முதல் சிப்ட் கிளம்பியது என்றால் சரிதான். முதல் சிப்ட் என்பதால் பேருந்தில் பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்றால் இருந்திருக்கலாம். புகாரில் இரண்டு பெண்கள் பேருந்தில் ஏறுவதற்காக ஓடி வந்ததாக

குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் பஸ்ஸை நிறுத்த வேண்டிய அவசியமில்லை என்றால் சரிதான். அ.சா.1 தான் பேருந்தில் இருந்து இறங்கியிருந்தால் தடுமாறி கூட கீழே விழ வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1ஐ எங்கு சென்று பார்த்தேன் என்றால் கோயம்புத்தூர் மருத்துவமனையில். மோட்டார் வாகன ஆய்வாளர் அவரது ஆய்வறிக்கையில் பேருந்தில் எவ்வித சேதமும் இல்லை என குறிப்பிட்டுள்ளால் என்றால் சரிதான்.

அ.சா.1க்கு வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் தான் காயச்சான்று வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதனால் திருப்பத்தூர் மற்றும் கோயம்புத்தூர் மருத்துவமனைகளில் அ.சா.1க்கு சிகிச்சையளித்த மருத்துவர்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சாட்சி பட்டியலில் உள்ள 2, 3, 4 வரையிலான சாட்சிகள் அ.சா.1ன் உறவினர்கள் மற்றும் ஊர்காரர்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த இடத்தின் இருபுறத்திலும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். அப்படி இருக்கும் இடத்தில் ஒரு வாகனம் வேகமாக வர வாய்ப்பில்லை என்றால் சரியதான். விபத்து முழுக்க முழுக்க அ.சா.1ன் அஜாக்கிரதையாலும்,கவனக்குறைவாலும் தான் நடந்தது என்றால் சரியல்ல. பேருந்தில் ஓட்டுநர் இருக்கையில் இருந்து பக்கவாட்டில் உள்ள கண்ணாடியில் இருந்து இடது பக்கத்தை தான் பார்க்க முடியும் என்றாலும், ஒருவேளை அந்த கண்ணாடி சரியாக பொருத்தப்படாமலோ, இல்லாமலோ இருந்தால் பார்க்க முடியாது என்றால் சரிதான். நான் பாதிக்கப்பட்டவர் அரசு ஊழியர் என்பதால் அவருக்கு ஆதாயம் செய்வதற்காக தவறான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கை சரிவர புலன்விசாரணை செய்யாமல் உதவி ஆய்வளார் கூறியதின் பேரில் எதிரியின் மீது அவசர அவசரமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதையாலோ, கவனக்குறைவாலோ இவ்விபத்து ஏற்படவில்லை என்றாலும், அதனால் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ராமமூர்த்தி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.04.30 10:13:02 +0530